# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## முதலாம் தவணைப் பரீட்சை – 2024

| தரம் :- 12 | இந்துநாகரிகம் | 46 | I | நேரம் : 2 மணித்தியாலம் |
|---|---|---|---|---|

### பகுதி I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01) பண்பாடு என்பது "அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், சட்டம், பழக்கவழக்கம் என்பவற்றின் முழுமைத் தொகுதியாகும்" என குறிப்பிட்டவர்?
(1) சேர்.ஜோன். மார்ஷல் (2) எட்வாட் டெய்லர்
(3) T.S எலியாட் (4) ரி.கே. சிதம்பரநாதமுதலியார்
(5) டாக்டர்.மா. இராசமாணிக்கனார்

02) இந்திய சிற்பகலை இந்தியாவிற்கே உரியது எனக் குறிப்பிட்டவர்?
(1) அறிஞர் மக்கே (2) பயசு (3) சேர்.ஜோன். மார்ஷல்
(4) அலெக்சான்டர் (5) கனிங்காம்

03) இந்துப்பண்பாட்டில் இசைமரபு வளம் பெற முன்னோடியாக விளங்கிய நூல்?
(1) இருக்கு வேதம் (2) யசுர் வேதம் (3) சாம வேதம்
(4) அதர்வண வேதம் (5) யாழ் நூல்

04) உழவனுக்கும் வர்த்தகனுக்கு செல்வச்செழிப்பைத் தரும் அதர்வண வேதப்பகுதி
(1) பேசஜானி (2) இராஜசர்மானி (3) பௌஷ்டிகானி
(4) ஸ்திரி கர்மானி (5) அரசதர்மானி

05) ஆகமம் சார் வழிபாட்டையும் அவை சார்ந்த அனுஷ்டனங்களையும் விதிகளாக விளக்குவதால் சிவாகமத்துக்க வழங்கப்படும் பெயர் யாது?
(1) சாத்திரங்கள் (2) ஆப்த வாக்கியம் (3) சிரௌதம்
(4) சுபந்திரம் (5) ஆம்நயம்

06) தத்துவ இலக்கியமாகவும், யோகநூலாகவும் பக்தி நூலாகவும் காணப்படும் நூல் எது?
(1) வேதம் (2) ஆகமம் (3) புராணம்
(4) இராமாயணம் (5) பகவத்கீதை

07) "ஓர் நாமம், ஓர் ஒருவம் ஒன்றுமில்லாருக்கு ஆயிரம் திருநாமம் பாடி தெள்ளேணம் கொட்டாமே" என இறைவனின் சிறப்பை குறிப்பிடும் அடியவர்?
(1) அப்பர் சுவாமிகள் (2) சம்பந்தர் (3) சுந்தரர்
(4) மாணிக்கவாசகர் (5) காரைக்கால் அம்மையார்

08) கம்பராமாயணம் தோற்றம் பெற்ற காலப்பகுதி?
(1) சங்ககாலம் (2) சோழர்காலம் (3) பல்லவர்காலம்
(4) சங்கமருவிய காலம் (5) நாயக்கர்காலம்


kalvi.lk

09) விஸ்ணுபரத்துவத்தின் சிறப்பினை எடுத்துக்காட்டும் விடயம் எது?

(1) அடிமுடி தேடிய கதை (2) துர்கை மகிடாசூரனை அழித்தல்

(3) பக்தப்பிரகலாதன் கதைகள் (4) பாகவத புராண அவதாரம்

(5) ஆணவ மலத்தின் அழித்தலை குறிக்கும்

10) பிராமணிய வழிபாட்டையும், நாட்டார் வழிபாட்டையும் இணைத்துக் கூறும் சங்க இலக்கியம்

(1) கலித்தொகை (2) திருமுருகாற்றுப்படை (3) நற்றினை

(4) பரிபாடல் (5) தொல்காப்பியம்

11) பல்லர் காலத்தில் ''சிற்பக்கலைக் களஞ்சியம்'' என போற்றப்படும் ஆலயம்

(1) திரௌபதைரதம் (2) வீமராஜன் ரதம் (3) கொற்றவை ரதம்

(4) தர்மராஜரதம் (5) அருச்சுனன் ரதம்

12) ''சிவனுக்கு மேல் தெய்வம் இல்லை. அவனே முழுமுதற்கடவுள் சிவனை நினையாதோர் ஆறு முறை சபிக்கப்படுவார்கள்.'' என எம் மன்னனின் சிவ பக்தி எடுத்து காட்டப்படுகின்றது?

(1) இராசிம்மன் (2) பரமேசுவர்மன் (3) மகேந்திரவர்மன்

(4) நரசிம்மவர்மன் (5) சிம்மவிஷ்ணு

13) சித்தார்ந்த நூல்களில் காலத்தால் முந்திய நூல்கள் எது?

(1) சிவஞானபோதம் (2) சிவஞான சித்தியார் (3) திருக்களிற்றுப்படியார்

(4) திருவருட்பயன் (5) சிவப்பிரகாசம்

14) சோழர்கால கோயில்களில் ''தஞ்சைக் கோயிலின் பிரதி'' என சிறப்பிக்கப்படும் ஆலயம்?

(1) விஜயால சோழேஸ்வரம் (2) சிதம்பரம் (3) ஐராவதேஸ்வரம்

(4) திரிபுவனேஸ்வரம் (5) கங்கை கொண்ட சோழேஸ்வரம்

15) நாயக்க மன்னர்களில் ஒருவான கிருஷ்ண தேவராஜரால் எழுதப்பட்ட நூல் எது?

(1) விஸ்ணு சித்தியம் (2) காளாத்தி மகாத்மீயம் (3) பிரபுலிங்கலீலை

(4) பசவபுராணம் (5) சேது புராணம்

**16 தொடக்கம் 20 வரையான வினாக்களில் தரப்பட்ட கூற்றுக்களை வாசித்து பொருத்தமானவற்றை பின்வரும் அட்டணையில் I,II,III,IV ஆகிய நிரல்களில் இருந்து தெரிவு செய்க.**

| | | | |
|---|---|---|---|
| A<br>பிரதிஷ்டை | F<br>ரதக்கோயில் | K<br>கேது | P<br>இருக்குவேதம் |
| B<br>சர்க்கம் | G<br>வேள்வி | L<br>சித்திரகாரபுலி | Q<br>வரிவடிவ எழுத்து |
| C<br>தாயத்துக்கள் | H<br>டாக்டர்மக்கே | M<br>நீண்டஆயுள் | R<br>ரக்ஷா |
| D<br>சிம்மவிஸ்ணு | I<br>வம்சம் | N<br>சீலாபரீட்சணம் | S<br>உற்சவம் |
| E<br>அக்கினி | J<br>கர்ஷணம் | O<br>சூரியவழிபாடு | T<br>பெரியகற்றளி |

16) புராணங்களோடு தொடர்புடைய பகுதி

(1) BIKR (2) BGKS (3) CENT (4) DJMP

(5) EIKR



kalvi.lk

17) பல்லவர் கால சமய வளர்ச்சியுடன் தொடர்புடை பகுதி

(1) DFOP (2) DFLT (3) DHNR (4) CFLQ

(5) CFLP

18) வேதகால சமயவளர்ச்சியுடன் தொடர்புடைய பகுதி

(1) EHLR (2) EIOP (3) EGMP (4) AGMS

(5) AGOT

19) ஆகமம் சார்ந்த நெறியோடு தொடர்புடை பகுதி

(1) AJKP (2) CJKP (3) CGOS (4) AJNS

(5) AJOS

20) சிந்து வெளி கால சைவசமய வளர்ச்சியுடன் தொடர்புடைய பகுதி

(1) CHKP (2) AGLP (3) DHOQ (4) LHMQ

(5) LHOQ

- **21 தொடக்கம் 25 வரையான ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததை தெரிவு செய்க.**

21) இதிகாச இலக்கியங்களில் ஒன்று மகாபாரதம்

(1) ஆதிபர்வம் தொடக்கம் மோட்சபர்வம் வரை ஒருலட்சம் சுலோகங்களை கொண்டது.

(2) கி.மு. 6ம் நுற்றாண்டில் தோற்றம் பெற்றது.

(3) சைவம், வைணவம், காணாபத்தியம், முதலிய சமய நெறிகளுக்கான மூலங்களை அறிவதற்கு உதவுகின்றது.

(4) ராஜதர்மம் உயர் நிலையில் போதிக்கப்படுகின்றது.

(5) குப்தர் காலத்துக்கு முன்பு இறுதி வடிவம் பெற்றது.

22) சிந்துவெளிகாலம்

(1) கி.பி 3250 தொடக்கம் கி.பி. 2750 வரையான காலப்பகுதியை உடையது.

(2) 1922 தொடக்கம் 1930 வரை ஆய்வு செய்யப்பட்டது.

(3) மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற பிரதான நகரங்கள் காணப்பட்டது.

(4) இந்துசமயம் இற்றைக்க 5000 ஆண்டுகள் பழமையானது.

(5) சேர். ஜோன். மார்ஷல் தலைமையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.

23) விஜயநகரநாயக்கர் காலம்

(1) கர்நாடக மாநிலத்தில் 1336ல் விஜயநகர பேரரசு உருவாக்கப்பட்டது.

(2) விஜயநகர பேரரசு தலைக்கோட்டை யோரை தொடர்ந்து வலுவிலந்தது.

(3) முதன்மையான அரசனாக கிருஷ்ணதேவராயர் காணப்படுகின்றார்.

(4) விஜயநகர ஆட்சியில் மண்டலஆட்சி வலுப் பெறத் தொடங்கியது.

(5) கிருஷ்ணதேவராயரின் அரண்மனைப்புலவராக சானாவதிமர் காணப்பட்டார்.



kalvi.lk

24) சோழ அரசர்களில் முதன்மையானவன் இராஜராஜசோழன்

(1) இவன் மும்முடிசோழ மண்டலம், கங்கை, கடாரம் தொண்டை மண்டலம் வரை தனது ஆதிக்கத்தில் கொண்டு வந்தவன்.

(2) இவனால் தேவார திருமுறைகள் தொகுக்கப்பட்டது.

(3) தஞ்சைப் பெருங்கோயில் இவனால் அமைக்கப்பட்டது.

(4) இவனின் பிறந்தநாள் ஐப்பசி சதயம்

(5) இவனது மகன் இராஜேந்திரசோழன்

25) இந்து சமய சிறப்பை கூறுவது புராணங்கள்

(1) இது பௌராணிகளர்களால் தோற்றுவிக்கப்பட்டது.

(2) மகாபுராணங்களின் எண்ணிக்கை 18 ஆகும்

(3) பஞ்சலட்சனம், தசலட்சணம் பற்றி குறிப்பிடப்படுகின்றது

(4) திருக்கோயில் வழிபாடு முறைகளை சிறப்பாக கூறுகின்றது.

(5) விஷ்ணுபரத்துவத்தில் அடிமுமுடி தேடியகதை கூறப்படுகின்றது.

(25 x 4 =100 புள்ளிகள்)

## பகுதி II

❖ **பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

### பகுதி I

(01) இந்துப்பண்பாட்டை வளம்படுத்திய மகாபுராணங்கள் பெறும் முக்கியத்துவத்தை மேல்வரும் தலைப்புகளில் விபரிக்க.

1. புராணங்களின் அமைப்பு
2. புராணங்களின் பகுப்பு
3. வழிபாட்டு முறைகள்
4. பிற்கால வளர்ச்சியின் புராணத்தின் முக்கியத்துவம்

(5+5+5+5 =20 புள்ளிகள்)

(02) "சிந்துவெளி காலத்தில் நிலவிய இந்து சமயம் சார்புடையது" என்பதை மேல்வரும் காரணிகளின் அடிப்படையில் ஆராய்க?

I. சிந்து வெளிகாலச் சான்றாதாரங்கள்

II. மக்களின் சமயநம்பிக்கை

III. சிந்துவெளி சமூக நிலை

IV. நுண்கலைகள்

(5+5+5+5 =20 புள்ளிகள்)

(03) இந்துநாகரிக வளர்ச்சியில் வேதங்கள் பெறும் முக்கியத்துவத்தை மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.

I. வேதங்களின் வகையும் அமைப்பும் II. வருணன்

III. வேதகால சமூக நிலை IV. தத்துவ சிந்தனைகள்

(5+5+5+5 =20 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II

(04) இந்துபண்பாட்டு மரபில் ஆகமங்கள் பெறும் சிறப்பினை ஆராய்க.

1. திருவுருவ அமைப்பும் ஆலய நிர்மானமும்
2. ஆகமம் கூறும் தத்துவ சிந்தனைகள்

(10+10=20 புள்ளி)

(05) இந்து சமயத்தின் சிறப்பை அறிய ஆதாரமாக இருப்பவை பண்பாடும், நாகரிகமும் ஆகும்.

I. பண்பாடு, நாகரிகம் வரைவிலக்கணப்படுத்துக.

II. இந்து நாகரிகத்தின் சிறப்பம்சங்களை விளக்குக.

(10+10 =20 புள்ளி)

(06) இந்து பண்பாட்டு மரபில் மகாபாரதம் பெறும் முக்கியத்துவத்தினை விளக்கி ஆராய்க.

(20 புள்ளி)

(07) பல்லவர் கால மன்னர்கள் இந்துசமய வளர்ச்சிப் பெரும் பங்கு ஆற்றியுள்ளார்கள் இக் கூற்றினை பின்வரும் தலைப்புக்களில் ஆராய்க?

1. நாயன்மார்களினது, ஆழ்வார்களினதும் பங்களிப்பு
2. மன்னர்களின் பங்கும் பணியும்

(10 + 10 =20 புள்ளி)

(08) இந்து நாகரிக வளர்ச்சியில் விஜயநகர நாயக்கர் காலம் பெற்றுள்ள முக்கியத்துவத்தினை ஆராய்க.

(20 புள்ளி)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page